ஃ
உண்மையே கடவுள்

# அறநெறிச் சிந்தனை

பகுதி II

★ திருவாசகம்
★ திருமந்திரம்
★ நன்னெறி
★ உலகநீதி
★ வெற்றிவேற்கை
★ விவேக சிந்தாமணி
★ தாயுமான சுவாமி பாடல்

பொது நிறுவனங்களுக்கான இலவச வெளியீடு.

**விநாயகர் தரும நிதியம்**
புலோலி மேற்கு — பருத்தித்துறை

**1994 - 10 - 01**

✳ உடலுழைப்பு ✳ சிக்கனம் ✳ சமத்துவம் ✳

பிரதிகள்: 2131 பக்கங்கள்: 32 முடிவு விலை: 5/70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# விநாயகர் தரும நிதியம்

புலோலி மேற்கு — பருத்தித்துறை.

"அரியது கேட்கின் வரிவடிவேலோய்
அரிது அரிது மானிடராதலரிது
மானிடராயினும் கூன்குருடு செவிடு
பேடுநீங்கிப் பிறத்த லரிது
பேடுநீங்கிப் பிறந்த காலையும்
ஞானமும் கல்வியும் நயத்தலரிது
ஞானமும் கல்வியும் நயந்த காலையும்
தானமும் தவமும் தான் செயலரிது
தானமும் தவமுந்தான் செய்வ ராயின்
வானவர் நாடு வழி திறந்திடுமே"

*மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்*
525/2, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## தமிழ் அரிச்சுவடி ஏடுகள்

எதிர்வரும் நவராத்திரி காலத்தில் வித்தியாரம்பம் செய்து வைக்கவுள்ள சபைகள், பாடசாலைகள், ஆலயங்கள் தமிழ் அரிச்சுவடி ஏடுகள் தேவைக்கு 'மில்க்வைற்' அதிபருடன் தொடர்பு கொண்டு இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம்.

உலகம் திருடனையும் கொலைகாரனையும் மன்னித்து வருகின்றது. ஆனால் எதையும் எதிர்பாராது உதவுபவனை அது வெறுக்கின்றது.

— நன்றி: ஈழநாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# முகவுரை

அறநெறி வாழ்க்கையாலேதான் இந்த ஈழத்தில் புதிய சமுதாயம் ஒன்று மலரும் என்ற அசையாத நம்பிக்கையால்தான் நாம்பல அறநெறி வெளியீடுகளை இலவசமாக வெளியிட்டு வருகின்றோம். அறநெறி வாழ்க்கைக்கு அடித்தளமாய் அமைவது அறநெறிக் கல்வியாகும். இந்த அறநெறிக் கல்வியை இளம் உள்ளங்களில் புகுத்துவதன் மூலமே அவர்களின் மனங்களில் அறநெறிச் சிந்தனையை வளர்க்க முடியும். இவ்வகையான அறநெறிச் சிந்தனை இளம் உள்ளங்களில் புதிய வரலாற்றை நிச்சயம் வரையும் என நாம் நம்புகின்றோம்.

இவ்வகையான உண்மையை நம் முன்னோர்கள் உணர்ந்தமையினால்தான் நமது வாழ்க்கைக்கு அத்தியாவசியமான நீதிவாக்கியங்களை எழுதிவைத்துள்ளனர். இந்த வகையிலே எம்மால் இந்நூலில் திருவாசகம், திருமந்திரம், நன்னெறி, உலகநீதி, வெற்றிவேற்கை, விவேகசிந்தாமணி, தாயுமான சுவாமிகள் பாடல்கள் என்ற ஏழு வகையான அறநெறிப் பாடல்களை இதில் தொகுத்து வெளியிட்டுள்ளோம்.

நமது இளம் சமுதாயத்திடம் இன்று மனனம் செய்யும் பழக்கம் அருகி வருகின்றது. மனனப் பழக்கம் குறைவதால் நம்முன்னோர்களது அறநெறிப்பாக்களின் மகத்துவத்தை இன்றைய தலைமுறையினர் மெல்ல மெல்ல இழந்து போக வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். மேற்குலக நாகரீக கவர்ச்சிகள் அறநெறி வளர்ச்சிக்கு தடைக்கல்லாய் அமைகின்றன என்பது யதார்த்தமான உண்மையாகும். இவ்வாறான நிலை தொடராமல் பணி செய்வது நம் எல்லோரது கடமையாகும்.

இன்று தமிழினம் தனித்தன்மை கெடாமல் தலை நிமிர்ந்து வீரத்துடனும், விவேகத்துடனும், மதிப்புடனும் வாழ்ந்து வருவதற்கு தமிழ்ச் சான்றோர் வகுத்த ஒழுக்க நெறியே அடிப்படைக் காரணமாகும். இந்த ஒழுக்க நெறிகள் நாம் தொகுத்துத் தந்துள்ள இந்த ஏழு நீதிநெறிப் பாக்களிலும் நிறையக் காணப்பெறுகின்றது. எனவே இதை மனனம் செய்வதன் மூலம் பயன் கிடைப்பது நிச்சயம் என நம்புகின்றோம்.

தனிமனிதன் ஒருவன் தனது நிலையில் நின்று அன்புவழியில் நீதி (உண்மை) தவறாது தனக்குரிய கடமையைச் செய்து வந்தால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் அறநெறி வழியில் வாழ்ந்தவன் ஆகின்றான். அவனால் அறநெறி வளர்ச்சி அடைகிறது. இவ்வாறு ஒவ்வொரு மனிதனும் ஒழுகினால் அவனது சமுதாயத்தில் அறநெறி வளர்கின்றன. ஒவ்வொரு சமுதாயமும் அறநெறியில் நடக்கும் போது அந்தநாட்டில் அறநெறிப்பண்புகள் ஓங்குகின்றன. இவ்விதம் சகல மக்களிலும் அறநெறிப் பண்பாடு வளரும்போது அந்நாட்டிலுள்ள சகலபிரச்சினைகளும் நீங்குகின்றன. இந்நெறி மேலோங்கிய நாட்டில் துயரமற்ற நல்லாட்சி மிளிர்கின்றது. இத் தமிழ் மொழியிலுள்ள அறநெறிகளை நாம் மறந்து விட்டோமானால் 'நாம் தமிழர்' என்று கூறி வாதம் செய்வதில் எதுவித பயனும் இல்லை. எனவே இவ் அறநெறிப் பாடல்களை எமது குழந்தைகள் இடையே மனனம் செய்யும் பழக்கத்தை மீண்டும் கொண்டு வருதல் எமது கடமையாகின்றது.

பல நூற்றாண்டுகளின் முன்னர் வாழ்ந்து வந்த தமிழ் மூதறிஞர்கள், நாயன்மார்கள், சமயகுரவர்கள், முனிவர்கள் ஆகியோர் சுயநலன் கருதாது உண்மை தவறாது கடும் உடல் உழைப்புடன் சிக்கன வாழ்க்கை வாழ்ந்து யாராவது ஒரு அநாதைக்கு உணவிட்ட பின்பே மிகுதியை தங்கள் உணவாக கொண்டுள்ளதை புராணங்கள் மூலம் நாங்கள் படித்திருக்கின்றோம். இக்காரணங்களால் அவர்கள் தாம் நினைத்த அறநெறிப் பணிகளை (சர்ப்பந் தீண்டிய குழந்தையை உயிர்ப்பித்தல், எலும்பைப் பெண்ணாக்கியமை, சொன்ன சொல் தவறாது சத்தியம் காத்தமை) அறநெறிப்பாக்களின் மூலம் செயலாக்க முடிந்தது. ஆகவே இவ் அறநெறியை முற்றிலும் கடைப்பிடிப்போர் தாம் நினைக்கும் நற்செயல்களை விரைவில் அடைந்தே தீருவர் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை; அற்புதம் என்று நாங்கள் நினைப்பது மிகமிகத் தவறாகும்.

எனவே இந்நூலை இளம் பராயத்தினரை படிக்கத் தூண்டச் செய்வது பெரியோரது தலையாய கடமையாகும். தானும் வாழ்ந்து மற்றோரையும் வாழவைப்பதே உண்மையான தர்மமாகும். இன்று பலரும் சுயநலவாழ்க்கை வாழவே ஆசைப்படுகின்றனர். தானும் வாழ்ந்து மற்றோரையும் வாழவைக்க நினைப்போரை தடுக்க முனைகின்றனர். இது நீதியாகாது அறநெறிப்பண்பாடாகாது. எனவே இந்நூலை ஒருமுறைக்கு ஒன்பது முறை படியுங்கள். அதன் பொருளைப் புரிந்து உண்மை வழிநடந்து நாட்டுக்கும் நமது சமுதாயத்திற்கும் பெரும் பணியாற்றுமாறு அன்போடும், பண்போடும் பணிவோடும் இருகரம்கூப்பி வேண்டுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருவாசகம்

## மாணிக்கவாசகர் அருளியது

யானேபொய் என் நெஞ்சும்பொய் என்அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உனைப் பெறலாமே
தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கும்
மானே அருளாய் அடியேன் உனைவந்து உறுமாறே.

எமது உடல் நிலையற்றது. எமது நெஞ்சும் இருள் நிறைந்தது எமது அன்பும் கபடத் தோற்றமானது. ஆனால் இவ்வளவுக்குமுரிய வினைப்பயனை அனுபவிக்கும் நான் உனை உணர்ந்து அழுதால் ஐந்து பூதச் சேர்க்கை விகிதாசாரம் மாறுபட்டு இறைவனை (ஒளியை) அடையும் வழியை பெறலாகும். என் உள்ளத்தில் தேனாகவும் அமுதமாகவும் கரும்புரசமாகவும் தித்திக்கும் உண்மைப் பொருளே நாயேன் உனை வந்து அடைவதற்குரிய ஐந்துபூதச் சேர்க்கை விகிதாசாரத்தை அருள்வாயாக.

மாறிநின்று என்னை மயக்கிடும் வஞ்சப்புலன்
 ஐந்தின் வழியடைத் தமுதே
ஊறிநின்று என்னுள் எழுபரஞ் சோதி
 உள்ளவா காண வந்தருளாய்
தேறலின் தெளிவே சிவபெரு மானே
 திருப்பெருந் துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த
 இன்பமே என்னுடை அன்பே.

ஒவ்வொரு விநாடியும் மாறி மாறி என்னை மயக்கி கீழ் நிலைக்கு ஆளாக்கும் ஐந்து புலன்களின் பாதையை அடைத்து நிற்கும் அமுதமே, என்னுள்ளத்தில் ஊறிநிற்கும் சோதியாய் நிறைந்தவனே, விகிதாசாரத்தை காணமுடியாத பூதச் சேர்க்கையாகி என் உள்ளம் நிறைந்தவனே. நான் காணவந்து அருள்வாயாக.

இன்றெனக் கருளி இருள் கடிந்து உள்ளத்தே
 எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
 நீயலாற் பிறிது மற்றின்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றுசென்று அணுவாய் தேய்ந்து தேய்ந்து
ஒன்றாகும் திருப்பெருந் துறையுறைசிவனே
ஒன்று நீயல்லை அன்றி ஒன்றில்லை
யார்ருன்னை அறியகிற் பாரே.

எனது உள்ளத்தில் அஞ்ஞானமாகிய பொய்மை நீக்கி ஒளி விளக்காய் விளங்கிடும் உண்மைப் பொருளாகிய நினது தன்மையை நினைவு கூருகிறேன். நீ இல்லாமல் எதுவும் இல்லை. எமது எண்ணம் காரணமாக ஐந்துபூதச் சேர்க்கை அணு அணுவாய் ஒன்று குறைந்தும் ஒன்று கூடியும் ஓர் ஆன்மாவாய் விளங்கும் மெய்ப்பொருளே. ஒன்றில் நீ இல்லாமல் இருக்க வேண்டும். அல்லாவிடில் (ஐந்து பூதச் சேர்க்கையான) நீ இல்லாமல் எதுவுமே இல்லை. உன்னை அறியக் கூடியவர் எவருமே இல்லை.

தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னை
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்யாது
நீ பெற்ற தொன்று என்பால்
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்
திருப்பெருந் துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடம் கொண்டாய் யான்
இதற்கு இலனோர் கைம்மாறே.

மெய்ப்பொருளாகிய உன்னைத் தந்து என்னை நீ வாங்கியதில் ஆர் திறமைசாலி. நான் உன்னிடம் முடிவிலா ஆனந்தம் பெற்றுள்ளேன். என்னிடம் நீ எதுவும் பெறவில்லை. எனது எண்ணத்தை கோயிலாகக் கொண்ட மெய்ப்பொருளே, நீ எனது உடலில் ஐந்து பூதச் சேர்க்கையாகி இடம்கொண்டுள்ளாய் இதற்கு எவ்வித உபகாரத்தையும் செய்ய முடியாதவன் ஆகியுள்ளேன்.

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த்து உன்
விரையார் கழற்கு என்
கைதான் தலை வைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
சயசய போற்றி என்றும்
கைதான் நெகிழ விடேன் உடையாய்
என்னைக் கண்டு கொள்ளே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடம்பு சிலிர்ப்பெய்தி வியர்வை சொரிந்து எனது கையை சிர சின்மேல் வைத்து கண்ணீர் பெருகி, உள்ளம் வெதும்பி, பொய்தனை நீக்கி, உன்னைப் போற்றி, உன்னைப் பற்றியுள்ள எனது கையை நெகிழவிடமாட்டேன் என நான் சொல்வது பொய்யா மெய்யா என் பதை என் ஆன்மாவில் இடங்கொண்ட ஐந்துபூதச் சேர்க்கை அள வின் மூலம் கண்டுகொள்வாயாக.

*நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நான் நடுவே*
*வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்*
*ஆடகச்சீர் மணிக்குன்றே இடையறாது அன்புனக்கு என்*
*ஊடகத்தே நின்றுருகத் தந்தருள் எம்முடையானே.*

உனது அடியார் போன்று நாடகம் நடித்து வீடுசெல்ல அவசரப் படும் எனக்கு உண்மைப்பொருளான உன்மீது இடையறாத அன்பு உருகும்படியான ஐந்துபூதச் சேர்க்கை அளவைத் தந்தருள்வாயாக.

*வானாகி மண்ணாகி வழியாகி ஒளியாகி*
*ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்*
*கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு*
*வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே.*

நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் எனப்பெறும் ஐந்துபூதச் சேர்க்கையால் இயங்கும் உயிராகி அவ்வுயிர் உள்ளது போலவும், அற்றது போலவும் மாறி மாறி செயல்பெற நான், இது எனது சொத்து என்று சொல்லித் திரியும் உயிரினங்களை ஐந்துபூத விகிதாசார அள வினால் கூத்தாட்டுபவனாகி நிற்கும் உனது பெருமையை என்ன சொல்லி வாழ்த்த முடியும்.

*பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே*
*பற்றுநான் மற்றிலேன் கண்டாய்*
*சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே*
*திருப்பெருந் துறையுறை சிவனே*
*ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத் துரைக்கேன்*
*ஆண்டநீ அருள் இலையானால்*
*வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்*
*வருகவென்று அருள் புரியாயே.*

நிலம், ஆகாயமாய் பரந்து நிற்கும் உண்மைப் பொருளே, எந்த ஆசையும் எனக்குத் தேவையில்லை. உனது அருளைப் பெறுவதற் குரிய ஐந்துபூத விகிதாசார அளவை எனக்குத் தந்து மெய்ப்பொரு ளோடு சேரும் ஞானத்தைத் தந்தருள்வாயாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியே சுடரே சூழ்ஒளி விளக்கே
  சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள் வெண்ணீற்றாய்
  பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப்பெருந் துறையின்
  நிறைமலர்க் குருந்த மேவியசீர்
ஆதியே அடியேன் ஆதரித்து அழைத்தால்
  அதெந்துவே என்றரு ளாயே.

பிரம, விஷ்ணுக்கள் அறியாத நீதிப் பொருளாய் நிறைந்த அநாதிப் பொருளே! நாயேன் உனது அடியை அடைவதற்குரிய ஐந்து பூதச் சேர்க்கை அளவைத் தந்தருள்வாயாக.

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
  அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
  புழுத்தலைப் புலையனேன் தனக்கு
செம்மையே ஆய சிவபத மளித்த
  செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
  எங்கெழுந்து அருளுவது இனியே.

மாதா பிதாவான ஒப்பில்லாத மணியே. அன்பினில் விளையும் ஐந்துபூதச் சேர்க்கை அமுதமே, பொய்யைப் பெருக்கி வாழ்நாளை வீணாக்கும் அறிவு மயங்கிய அடியேனுக்கு சிறப்பான நற்கதி அளித்த மெய்ப்பொருளே. இப்பிறப்பிலே உன்னை இறுகப் பற்றிக்கொண்டதால் உருவாகும் ஐந்துபூதச் சேர்க்கை மாறுபட இனிமேல் எப்பிறப்பில் எம்மை விடப்போகிறாய்.

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
  பரிந்துநீ பாவியேன் உடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
  உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
  செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
  எங்கு எழுந்தருளுவது இனியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயினும் சிறந்த பரிவுடன் அடியேனுடைய உடம்பை உருக்கி உள்ளொளி பெருக்கி ஆனந்தத் தேனைச் சொரிந்து நிற்கும் மெய்ப் பொருளே. இப்பிறப்பிலே உன்னை இறுகப் பற்றிக்கொண்டதால் ஏற்படும் ஐந்து பூதச் சேர்க்கை வித்தியாசம் காரணமாக இனிமேல் எம்மை எப்பிறப்பில் பிறக்கவிடப்போகிறாய்.

உற்றாரையான் வேண்டேன் ஊர்வேண்டேன்பேர் வேண்டேன்
கற்றாரையான் வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தா உன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போல கசிந்து உருக வேண்டுவனே.

சொந்தக்காரரையோ, ஊரையோ, எனது பெயரையோ பெரியவர்களையோ எனக்குத் தேவையில்லை. மெய்ப்பொருளாகிய உனது பாதாரவிந்தங்களை நினைந்து நினைந்து கசிந்துருகும் மனதிற்குரிய ஐந்துபூதச் சேர்க்கை அளவைத் தந்தருள்வாயாக.

உ

# திருமூலர் திருமந்திரம்

ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமை
ஆரறிவார் இந்த அகலமும் நீளமும்
பேரறியாத பெருஞ் சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்பு கின்றேனே.

உண்மைப் பொருளின் சிறப்பையும், இப் பிரபஞ்ச பரப்பையும், பெயர் குறிப்பிடமுடியாத ஒளி ஒன்றினது ஆரம்பத்தையும், முடிவையும் எவரும் காணமுடியாத ஒன்று என கூற விரும்புகிறேன்.

அன்பும் சிவமும் இரண்டென்பார் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந் திருப்பாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்துபூத சேர்க்கை கீழ் நிலையிலுள்ள அறிவில்லாதவர் அன்பும், உண்மைப் பொருளும் இரண்டு என்று கூறுவார். அவர்கள் அன்பே உண்மையாவதை அறியமாட்டார்கள். ஐந்துபூத விகிதாசாரம் மேல் நிலைக்குரியதாய் மாறியதும் அன்புதான் உண்மைப் பொருள் என்பதை அறிந்து உண்மைப்பொருளான அன்பாய் மாறிவிடுவார்கள்.

அண்ணல் இருப்பிடம் யாரும் அறிகிலர்
அண்ணல் இருப்பிடம் ஆய்ந்து கொள்வார்களுக்கு
அண்ணல் அழிவின்றி உள்ளே அமர்ந்திடும்
அண்ணலைக் காணில் அவன் இவனாகுமே.

உண்மைப் பொருளின் இருப்பிடத்தை எவரும் அறிய முடியாது. உண்மைப்பொருளின் இருப்பிடத்தை உள்ளத்தைக் குடைந்து குடைந்து ஆராய்பவர்களுக்கு ஐந்துபூத விகிதாசாரம் மேல் நிலை அடையும். அவ்வாறு மேல்நிலை அடைந்தவர்கள் உண்மைப் பொருள் உள்ளத்தினுள்ளே அமர்ந்திடும் காட்சியைக் காணுவார்கள். அவ்வாறு கண்டதும் அவர்கள் உண்மைப் பொருளுடன் இரண்டறக் கலந்துவிடுவர்.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

ஐந்துபூத விகிதாசாரம் கீழ் நிலையாயுள்ள தீவினையாளர்கள் உண்மை, உண்மை என்று சொல்லமாட்டார்கள். உண்மை உண்மை என்று உண்மைப்பொருளை அறிய விரும்புபவர்களுக்கு ஐந்து பூத விகிதாசாரம் மேல்நிலையடைகிறது. அவ்வாறு மேல்நிலையடைந்ததும் அதன் பயனாக தீவினைப் பண்புகள் அற்ற தெய்வீக நிலைத் தேவர்கள் ஆவார்கள். ஈற்றில் உண்மைப் பொருளினது ஒளியில் இரண்டறக் கலந்துவிடுவர்.

★ சிறுவயதில் பயின்ற தமிழ்மொழியின் செய்நன்றியை மறவோம்.

★ ஞானம் வளர்த்த தமிழ்மொழி வளர உள்ளத்தை நெறிப்படுத்துவோம்.

★ எம்மை ஆளாக்கிய தமிழ் மொழியின் அறநெறியை எம் ஆன்மா ஒளியில் சேரும்வரை நினைந்து நினைந்து கண்ணீர் உருகுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

௩

# ஞானப்பிரகாச சுவாமிகள் அருளிய நன்னெறி

## உயர்ந்தோரின் அறம்

1. என்று முகமன் இயம்பாதவர் கண்ணும்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர் - துன்றுசுவை
பூவிற்பொலி குழலாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து. 1

நாவின் புகழ்ச்சியைக் கருதாமல் கையானது நாவிற்கு உணவுகளை அளிப்பது போன்று, தம்மைப் புகழாதவர் இடத்தும் மேலோர் வலிந்து சென்று பொருள் கொடுத்து உதவுவர்.

## பயன்தரு சொல் எது?

2. மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல்இனிது ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிதென்க - ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதால் ஒண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு. 2

சிவபெருமானுக்கு மன்மதனுடைய மலர்க்கணையிலும் பார்க்க நாயனாரான அடியவர் எறிந்த கல்லு விருப்புக்குரியதாயிற்று. அது போலவே களங்கமற்ற உள்ளம் உடையோர் சொல்லுகின்ற கடுமையான சொற்களும் நற்பயனை அளிக்கும். களங்சமுடைய வஞ்சகரின் இன்சொல்லு வீழ்ச்சியைக் கொடுக்கும்.

## உலோபிகள் செல்வம் பிறர்க்கே உரியது

3. பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம் - பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடல் நீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. 4

பிறருக்கு உதவி செய்யாதவர்களுடைய பெரிய செல்வம் பிறருக்கு உதவி செய்பவர் செல்வமாகவே கருதப்படும். அதேபோன்றே பிறருக்கு உதவாத உவர்நீரையுடைய கடல்நீரை மேகம் நுகர்ந்து சென்று உலகிற்கு நன்னீராய் வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியாற் செருக்கடையேல்

4. கடலே அனையம்யாம் கல்வியா லென்னும்
அடலே றனைய செருக் காழ்த்தி - விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப்படும். 7

நாம் கடல்போல கல்வியறிவுடையோர் என்று சிங்கத்தைப் போல் கர்ச்சித்து திரிதல் ஆகாது. இதற்கு ஒப்பாக முனிவர்க்கு தலைவராகிய அகத்தியர் குளிர்மை பொருந்திய கடலினையும் ஓர் உழுந்தனவாக்கி ஆசமனம் செய்து விளக்கியுள்ளார்.

## வளத்துக் கேற்ப வழங்குவர்

5. பெருக்க மொடுசுருக்கம் பெற்ற பொருட்குஏற்ப
விருப்ப மொடுகொடுப்பர் மேலோர் - சுரக்கும்
மலையளவு நின்றமுலை மாதே! மதியின்
கலையளவு நின்ற கதிர். 13

சந்திரன் தனது கலைகளுக்கு ஏற்ப ஒளியை வழங்குதல் போல மேலோர் தம்மிடம் உள்ள செல்வத்திற்கேற்ப அதிகளவாகக் கொடுப்பினும் சிறிதளவாகக் கொடுப்பினும் அதனை விருப்பத்தோடு கொடுத்திடுவர்.

## மேருமலையும் வளைந்தது

6. தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர் செருக்குச் சார்தல் - இலையால்
இரைக்கும் வண் டுதுமல ரீங்கோதாய் மேரு
வரைக்கும்வந் தன்று வளைவு. 14

நாங்கள் குறைவில்லாத செல்வத்தை உள்ளோம் என்று பெருமை கொள்ளல் ஆகாது. பொன்மலையாம் மேருமலைக்குக் கூட ஒருகால் வளைவு நேர்ந்தது தெரிந்ததே.

## உயர்ந்தோர் பண்பு

7. தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர் - தம்மின்
இழியினுஞ் செல்வர் இடர்தீர்ப்பர் அலகு
கழியினுஞ் செல்லாதோ கடல். 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் உயர்வையும் தலைமைத் தன்மையையும் கருதி பெருமை பாராட்டாது அடைக்கலமாயடைந்த அறிவுடையார், தம்மிலும் தாழ்ந்தவராயினும் அவர்களுக்கு உண்டாகும் இன்னல்களைப் போக்கு வர். அதேபோன்று பரந்த கடலானது குறைந்த நீரையுடைய குடாக் கடலுள்ளும் பெருகி ஓடும்.

## தம்நோய் போல் பிறர்நோய் காணல்

8. பெரியவர்தம் நோய்போற் பிறர்நோய்கண்டு உள்ளம்
எரியின் இழுதாவார் என்க - தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். 20

நோயினால் வருந்துகின்ற உறுப்புக்களை நோக்கி கண்கள் நீரைச் சொரிதல் போல உயர்ந்தோர் பிறர்க்கு வருகின்ற நோயினை தம் நோய்போல் உணர்ந்து உருகுவர்.

## அறிவில் உயர்ந்தது அகிலத்தில் இல்லை

9. ஆக்கு மறிவி னலது பிறப்பினால்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க - நீக்கு
பவரா ரரவின் பருமணிகண் டென்றும்
கவரார் கடலின் கடு. 22

விசநாகத்திலுள்ள இரத்தினத்தைக் கண்டு விரும்புபவர்கள் பாற் கடலில் உண்டான ஆலகால விசத்தை அடைதற்கு விரும்பார். ஆகவே அறிவுடைமையினாலன்றி பிறப்பினால் வரும் உயர்வையோ தாழ் வையோ விரும்பல் வேண்டாம்.

## கூற்றங் குறுகமுன் செய்க அறம்

10. கொள்ளும் கொடும்கூற்றம் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளம் கனிந்துஅறஞ்செய்து உய்கவே - வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்
பெருகுதற்கண் என்செய்வார் பேசு. 30

வெள்ளம் பெருகி வருவதற்கு முன்னரே அணைகட்டி வையா தவர்கள் வெள்ளம் பெருகியபின் ஒன்றும் செய்யமுடியாது. அது போலவே உயிரைக் கவரும் கொடிய யமன் கொல்வதற்கு வருவதற்கு முன்னரே நெஞ்சம் கசிந்து தருமம் செய்து உய்வீராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விழுமியோர் கொடைச் சிறப்பு

11. தக்கார்க்கே ஈவர் தகார்க்கு அளிப்பார் இல்லென்று
மிக்கார்க்கு உதவார் விழுமியோர் - எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய். 36

எந்தக் காலத்திலும் நெல்லுக்கு இறைப்பதே அன்றி காட்டுப் புல்லுக்கு நீர் இறைக்க மாட்டார்கள். அதுபோல் பெரியோர் (உயர்ந்தோர்) உதவி தேவைப்படுவோரை பகுத்தறிந்து உதவி புரிவார்கள்.

## உயர் நட்பும் இழிநட்பும்

12. நல்லார் செயும் கேண்மை நாடோறும் நன்றாகும்
அல்லார் செயுங் கேண்மை ஆகாதே - நல்லாய்கேள்
காய் முற்றிற் றீங்கிங் கனியாம்; இளந்தளிர்காள்
போய் முற்றின் என்னாகிப் போம்? 38

நல்லவரின் நட்பு நாட் செல்லச்செல்ல வளர்ந்து நன்மை தரும். தீயார் நட்பானது காலம் செல்லச்செல்ல அழிந்து போய்விடும். இதே போன்று காயானது முற்றி முதிர்ந்தால் சுவை நிறைந்த கனியாகும். ஆனால் இளமையான பசுந்தளிர்களோ இலையாகி பின் சருகாகி தீயார் நட்பைப் போல் அழிந்து விடும்.

卐 卐 卐

# உலகநாதனார் இயற்றிய
# உலகநீதி

1. ஓதாம லொருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்
போகாத இடந்தனிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதஉரை:

படிக்காமல் ஒரு நாளாவது இருக்காதே. எவரையும் தீயசொற்களால் நிந்திக்காதே. தாயை ஒரு பொழுதும் மறவாதே. கபடச் செயல்களைச் செய்பவருடன் சேராதே. தகாத இடத்திலே போகாதே. உன்னிடம் வந்து போனவரைப் பற்றி இழிவாகக் கூறித் திரியாதே. வள்ளி நாயகியைப் பக்கத்திலுடைய மயிலேறும் முருகக்கடவுளை மனமே வாழ்த்துவாயாக.

2. நெஞ்சாரப் பொய்தனைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே யொருநாளும் பழக வேண்டாம்
நல்லிணக்க மில்லாரோ டிணங்க வேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை யொருநாளுங் கெடுக்க வேண்டாம்
மஞ்சாருங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

பதஉரை:

மனப்பூர்வமாகப் பொய்யைச் சொல்லாதே. உறுதி இல்லாத காரியத்தைச் செய்யாதே. விசப்பாம்பு போன்ற குணமுடையோருடன் சேர்ந்து பழகாதே. நல்ல நடத்தை இல்லாதவருடன் நட்புக் கொள்ளாதே. பயமின்றித் தனிவழியே செல்லாதே. உன்னுடன் கூடிப் பழகுபவரை எக்காலமும் கெடுக்காதே. வல்மை மிகுந்த குறவருடைய மகளாகிய வள்ளிநாயகியை பக்கத்திலுடைய மயிலேறும் முருகக் கடவுளை மனதார நீ வாழ்த்துவாயாக.

3. மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்
மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்
தனந்தேடி யுண்ணாமற் புதைக்க வேண்டாம்
தருமத்தை யொருநாளும் மறக்க வேண்டாம்
சினந்தேடி யல்லலையுந் தேட வேண்டாம்
சினந்திருந்தார் வாசல்வழிச் சேரல் வேண்டாம்
வணந்தேடுங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

பதஉரை:

உள்ளம் சென்றபடி எல்லாம் செல்லாதே.
பகைவனை உறவினன் என்று நம்பாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளை வருந்திச் சம்பாதித்து செலவிடாமல் மண்ணில் புதையாதே. அறம் செய்தலை ஒருபொழுதும் மறக்காதே. கோபத்தை அடைந்து அதனால் விளையும் துன்பத்தினை தேடாதே. கோபித்திருந்தவருடைய வாசல் வழியாகவும் செல்லாதே. காட்டு விலங்குகளை தேடித்திரியும் குறவருடைய மகளாகிய வள்ளி நாயகியை பக்கத்தில் உடைய மயில் ஏறும் முருகக்கடவுளை மனதார நீ வாழ்த்துவாயாக.

4. சேராத இடந்தனிலே சேர வேண்டாம்
செய்தநன்றி யொருநாளும் மறக்க வேண்டாம்
ஊரோடுங் குண்டுணியாய்த் திரிய வேண்டாம
உற்றாரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்
பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்
பிணைபட்டுத் துணைபோகித் திரிய வேண்டாம்
வாராருங் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே.

பதஉரை:

சேரக்கூடாத இடங்களிலே போகாதே.
ஒருவர் செய்த உதவியை ஒருபொழுதும் மறக்காதே.
ஊர் முழுவதும் கோள் சொல்பவனாக அலையாதே.
உறவினரை இகழ்ச்சியாகக் கூறித் திரியாதே.
நன்மைதரும் காரியங்களைச் செய்யாது விடாதே.
ஒருவனுக்கு துணையாகச் சென்று அவன் செல்லும் கெட்ட வழிகளில் போய் அலையாதே.
தொழில் திறமையுள்ள குறவருடைய மகளாகிய வள்ளிநாயகியை சக்தியாய் உள்ள மயில் ஏறும் முருகக்கடவுளை மனதார நீ வாழ்த்து வர்யாக.

✳ ✳ ✳

## அதிவீரராம பாண்டியன் அருளிய
## வெற்றிவேற்கை

### குரு எனும் இறைவன்

1. எழுத்தறிவித்தவன் இறைவனாகும் 1
கல்வியை ஊட்டும் ஆசிரியர் இறைவனுக்குச் சமமாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கல்விக் கழகு கசடற மொழிதல் 2
பிழையின்றிப் பேசுதலே கல்விக்கு அழகாகும்.

3. செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல் 3
செல்வர்க்கு அழகானது சுற்றத்தவரைக் காத்தலாகும்.

4. வேதியர்க் கழகு வேதமும் ஒழுக்கமும் 4
மறையவர்க்கு அழகானது நான்கு வேதங்களை ஓதுதலும் அதன்படி ஒழுகுதலும்.

5. மன்னவர்க் கழகு செங்கோன் முறைமை 5
அரசர்க் கழகானது செங்கோல் முறையாக மக்களைக் காத்தலே யாகும்.

6. வ்ணிகர்க் கழகு வளர் பொருள் ஈட்டல் 6
பெருகும் செல்வத்தை நீதியான வழியில் சம்பாதித்தலே வர்த்தகருக்கு அழகாகும்.

7. உழவர்க் கழகு உழுதூண் விரும்பல் 7
பயிர்செய்து உண்பதே விவசாயிக்கு அழகாகும்.

8. மந்திரிக் கழகு வரும் பொருள் உரைத்தல் 8
எதிர்வரப் போவனவற்றை ஆராய்ந்து எடுத்துரைத்தல் மந்திரிக்கு அழகாகும்.

9. தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை 9
பயமின்மையும், வீரமும் படைத்தளபதிக்கு அழகாகும்.

10. உண்டிக் கழகு விருந்தோடு உண்டல் 10
விருந்தினரோடு பகிர்ந்துண்ணலே உண்ணலுக்கு அழகாகும்.

11. பெண்டிர்க்கு அழகு எதிர்பேசாது இருத்தல் 11
கணவரின் வார்த்தைக்கு எதிர் பேசாதிருத்தலே பெண்களுக்கு அழகாகும்.

12. குலமகட்கு அழகுதன் கொழுநனைப் பேணுதல் 12
நற்குடியினில் பிறந்த பெண்களுக்கு அழகு தன் கணவனைப் போற்றி ஒழுகுதல் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. அறிஞர்க் கழகு கற்று உணர்ந்து அடங்கல் 13
கற்ற நூல்களின் படி ஒழுகி நடத்தலே அறிஞர்க்கு அழகாகும்.

14. வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை 14
சிக்கனமான வாழ்க்கையே ஏழைக்கு அழகாகும்.

## உருவு கண்டு அஞ்சற்க

15. தேம்படு பனையின் திரள் பழத்து ஒரு விதை 15
வானுற ஓங்கி வளம் பெற வளரினும்
ஒருவர்க்கு இருக்க நிழல் ஆகாதே.

பெருமரமான பனைமரத்தின் நிழலானது ஒருவர் நிற்க உதவாத தன்மைபோல் உருவால் பெருத்தவர்கள் சிறப்புற்றவர் என எண்ண வேண்டாம்.

## சிறிதும் பெரும் பயன் தரும்

16. தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே 16

மீனின் முட்டையிலும் பார்க்கச் சிறியதாக ஆலம்விதை இருந்தாலும் அது வளர்ந்து மரமாகும் பொழுது பெரும் அரச சேனைகளுக்கும் நிழலைத் தரவல்லது. ஆகவே உருவிற் சிறியவராய் இருந்தாலும் பயனில் குறைவானவர் எனக் கருதுதல் தவறு.

## நன்மக்கள் எவர்

17. பெற்றோரெல்லாம் பிள்ளைகள் அல்லர் 18
ஒருவர் பெற்ற பிள்ளைகளில் அறிவு அறிந்த நன்மக்களே பிள்ளைகள் எனத்தக்கவர்.

## உற்றுழி உதவாதார் உறவினரோ?

18. உற்றா ரெல்லாம் உறவினரல்லர் 19
உண்மையான ஆபத்துச் சந்தர்ப்பங்களில் உதவுபவர்களே உறவினர் எனக் கூறத்தக்கவர். மற்றைய எவரும் உறவினர் ஆகார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனை மாண்பு

19. கொண்டோ ரெல்லாம் பெண்டிரல்லர் 20

தாலிகட்டிய மனைவியரெல்லாம் மனைவியரல்லர். கணவனது வழி நடந்து வருபவரே உண்மை மனைவியராவர்.

## உத்தமர் பண்பு

20. அடினும் ஆவின்பால் தன்சுவை குன்றாது
சுடினும் செம்பொன் தன்ஒளி கெடாது
அரைக்கினும் சந்தனம் தன்மணம் மாறாது
புகைக்கினும் கார்அகில் பொல்லாங்கு கமழாது
கலக்கினும் தண்கடல் சேறாகாது. 21

பசுவின்பால் நன்றாய்க் காய்ச்சினாலும் சுவையிலே குறைவு படாது. நெருப்பிலிட்டுச் சுட்டாலும் பொன் தனது ஒளியிலே மாறாது: சந்தணம் கூடுதலாக அரைத்தாலும் நல்மணத்திலே மாறுபடாது. அகில்கட்டை புகைத்தாலும் தீயமணம் ஏற்படாது. கடல் நன்றாகக் கலக்கினாலும் சேறுள்ளதாகாது. இவைபோல நல்லோர் கஷ்டமேற்பட்ட காலத்தும் தம் உயர் பண்பிலிருந்து மாறுபடார்.

## செய்யும் செய்கையே பயனுக்கு வித்து

21. பெருமையும் சிறுமையுந் தான் தரவருமே. 23

உயர்வு தாழ்வுகள் எல்லாம் அவர் அவர்கள் செயல்களாலேயே ஒருவர்க்கு அமைகின்றன.

## தீமையைப் பொறுத்தல் சான்றோர் கடன்

22. சிறியோர் செய்த சிறு பிழை எல்லாம்
பெரியோராயிற் பொறுப்பது கடனே. 24

அற்பர்கள் செய்த சிறிய பிழைகளை எல்லாம் மேன்மக்கள் பொறுத்து மன்னித்தல் கடனாகும்.

## சிறியோரின் பெரும்பிழை

23. சிறியோர் பெரும்பிழை செய்தனராயில்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிதே. 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அற்பர் செய்யும் பிழைகள் பெரியனவாய் இருப்பின் மேன்மக்கள் அவற்றை மன்னிப்பது அரிதாகும்.

## மூர்க்கரின் நட்பு

24. நூறாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசிபோல் வேர் கொள்ளாதே. 26

நீர் உள்ளே பாசி வேர் கொள்ளாதது போல மூர்க்கராய் உள்ளவருடன் நூறாண்டு நட்புக் கொண்டிருப்பினும் எக்காலத்திலும் பயனளிக்க மாட்டாது.

## பெரியோர் நட்பு

25. ஒரு நாட் பழகினும் பெரியோர் கேண்மை
இரு நிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே. 27

பெரியோருடன் ஒருநாள் நட்புக் கொண்டாலும் அந் நட்பானது பெரிய நிலத்தைப் பிழந்து செல்லும் வேர்போல உறுதியாய் இருக்கும்.

## கல்வியின் மாண்பு

26. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே. 28

கற்பது மிக நல்லது, கற்பது மிக நல்லது (கற்றற்குரிய நூல்) பிச்சை எடுக்கும் போதும் கற்பது மிக நல்லதே.

## கற்றலின் குலப்பிறப்புப் பயனற்றது

27. நாற்பாற் குலத்தில் மேற்பால் ஒருவன்
கற்றில னாயிற் கீழிருப் பவனே. 29

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் ஆகிய நாலு வர்ணங்களில் உயர் வர்ணத்திலே தோன்றியவனாயினும் கல்வியறிவில்லாதவன் கீழ் வர்க்கமாகவே கருதப்படுவான்.

## கற்றோர்க்கு எங்கும் சிறப்பு

28. எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரே மேல்வரு கென்பர். 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த இழிந்த குலத்திலே பிறந்தவராயினும் அக்குலத்திலே கற்றவர்களையே மேலே வருக என்று சான்றோர் வரவேற்பர்.

## அறிவுடைமை

29. அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும். 31

அறிவாற் சிறந்த ஒருவனை அரசனும் விரும்பி வரவேற்பான்.

## கையிருந்து என்ன பயன்?

30. யானைக் கில்லை தானமுந் தருமமும். 33

யானைக்குத் தும்பிக்கையிருப்பினும் தான தருமங்களைச் செய்யும் பேறு அதற்கில்லை. அதுபோல மக்களாய்ப் பிறந்தவருள்ளும் தான தரும உணர்வுடையோர் சிலரே.

## சாதுக்கள் யாவரும் சன்மார்க்கரல்லர்

31. பூனைக் கில்லை தவமும் தயையும். 34

தவம் செய்வதும், கருணை காட்டுவதும் பூனையிடம் காண முடியாத குணங்களாகும். அஃதாவது கண்ணை மூடிச் சாதுவாயிருப்பவர் யாவரும் ஞானிகள் என்றோ, தயையுடையவர் என்றோ நாம் கொள்ளல் இயலாது.

## பற்றற்றவன் ஞானி

32. ஞானிக் கில்லை இன்பமும் துன்பமும். 35

முற்றுந்துறந்த ஞானியை ஒருசெயலால் நிகழ்கின்ற இன்ப துன்பங்கள் எந்த நாளும் பாதிப்பதில்லை.

## சுறையான் போல் வாழ்க

33. சிதலைக் கில்லை செல்வமும் செருக்கும். 36

புற்றையமைத்து வாழ்ந்தாலும் கறையானுக்கு அது தன் உடைமை என்றோ, பற்றோ அதனால் உண்டாகின்ற அகங்காரமோ இல்லை.

## அறிவற்றோர் அஞ்சார்

34. அச்சமும் நாணமும் அறிவிலோர்க் கில்லை. 37

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீயவற்றைச் செய்வதற்கு அஞ்சும் அச்சமும் பழியைக் கண்டால் நாணும் நாணமும் மூடர்களுக்கு இருப்பதில்லை.

### துன்புற்றோர்க்கு எவையும் ஒன்றே

35. நாளும் கிழமையும் நலிந்தோர்க் கில்லை. 38

மிக வறுமை உற்றவர்க்கு நல்ல நாள் நல்ல கிழமை என்பன இல்லை எனலாம்.

### ஏழைக்கு உறவில்லை

36. கேளுங் கிளையுங் கெட்டோர்க்கு இல்லை. 39

நண்பர், உறவினர் என்போர் வாழ்வில் வீழ்ச்சியடைந்த ஏழைகளுக்கு இல்லை, அவர்களை யாரும் விரும்பாராதலின்.

### நிலையாமை

37. உடைமையும் வறுமையும் ஒருவழி நில்லா. 40

செல்வமோ வறுமையோ நிலைத்து ஓரே இடத்தில் நிற்பன அல்ல.

### மாறிடும், ஏறிடும்

38. குடை நிழலிருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடை மெலிந்து ஓரூர் நண்ணினும் நண்ணுவர். 41

குடை நிழலில் இருந்து அரசு செலுத்திய அரசர்களும், தமது செல்வத்தை இழக்கும்போது நடந்து களைத்து தொழிலுக்காக வேற்றூரை நாடிச் செல்வதும் உண்டு.

### வாழ்வும் தாழ்வும்

39. சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக்கூழ்ச்சாலை அடையினும் அடைவர். 42

உயர்வையும் பெரும் செல்வத்தையும் பெருமிதத்தையும் உடையவராய் வாழ்ந்தவர்கள் அவற்றை எல்லாம் இழந்து இரந்துண்டு வாழவும் நேரும்.

### வீழ்ந்தோர் எழுவர்

40. அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோடு இருந்து அரசு ஆளினும் ஆள்வர். 43

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரந்து பிச்சை எடுக்கின்ற இரவலரும் (பிச்சைக்காரரும்) ஒரு நாள் அரசாட்சி நடத்தவும் முடியும்.

## குன்றமும் குப்பை மேடாகும்

41. குன்றத் தனையிரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர். 44

மலைபோல பெரும் செல்வத்தை வைத்திருப்போரும் அது கிடைத்த அன்றே அதனை இழந்து அழியவும் நேரிடும்.

## அழிவிலிருந்து ஆக்கம்

42. பெற்றமுங் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தருஞ் செறிந்து
நெற்பொலி நெடுநக ராயினு மாகும். 46

மாடும், கழுதையும் மேய்ந்து திரிந்த பாழிடம் காலமாற்றத்தால் பொன்னாபரணங்களை அணிந்த இளம் பெண்களும், இளைஞரும் நிறையப்பெற்று நெற்பயிரால் வளம் பொலிகின்ற பெருநகருமாகலாம்.

## அழியும் இவ்வணி உடல்

43. மணவணி அணிந்த மகளி ராங்கே
பிணிவணி அணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்த ஆடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர் 47

திருமணத்திற்கான ஆபரணங்களை அணிந்த பெண்கள் அம்மண வறையிலேயே அமங்கலக் கோலம் பூண்டு, இறந்துபோன தங் கணவரைத் தழுவித் தம் புதுமணப் புத்தாடையே அமங்கலிப் புத்தாடையாய் மாற முடிந்திருந்த கூந்தலை விரித்தவராய் விதவைக்கோலம் கொள்வர்.

## இரப்பது இயல்பு

44. இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே. 48

பொருள் இல்லாத ஏழைகள் இரப்பது இயற்கையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடுத்தல் கடன்

45. இரந்தோர்க் (கு) ஈவதும் உடையோர் கடனே. 49

இரந்து நிற்போருக்கு செல்வம் உடையோர் ஈந்திடுதல் கடனாகும்.

## கொடுங்கோல் மன்னர்

46. கொடுங்கோல் மன்னன் வாழு நாட்டிற்
கடும்புலி வாழும் காடு நன்றே. 54

நீதியற்ற அரசர் வாழ்கின்ற நாட்டிலும் புலி வாழும் காடு சிறந்தது.

## சான்றோர் இல்லாத நாடு

47. சான்றோ ரில்லாத் தொல்பதி யிருத்தலின்
தேன்றேர் குறவர் தேய நன்றே. 55

அறிவும், பண்பும் வாய்ந்த பெரியோர் இல்லாத பழைய நாட்டிலே வாழ்வதிலும் தேனைத் தேர்ந்தெடுக்கும் மலைக்குறவர் வாழ்கின்ற நாடு நல்லது.

## வணிகரிற் பதர்

48. முதலுள பண்டங் கொண்டுவா ணிபஞ்செய் (து)
அதன்பயன் உண்ணா வணிகரும் பதரே. 58

முதலாயுள்ள தனது பொருளின் உதவியால் வியாபாரஞ் செய்து அதனால் வரும் லாபங்கொண்டு உண்டு வாழாத வியாபாரியும் நெல்லிற் பதரே போலாவன்.

## பேதை

49. தன்னா யுதமும் தன்கையிற் பொருளும்
பிறன்கையிற் கொடுக்கும் பேதையும் பதரே. 61

தனது கையிலுள்ள ஆயுதத்தையும், தனக்குரிய செல்வத்தையும் பிறர் அநுபவிக்குமாறு கொடுக்கும் மூடனும் பதர் போலாவன்.

## பொய்யும் மெய்யும்

50. பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே. 63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் தன் வாய்ச் சாதுரியத்தாலே சொல்கின்ற பொய்யும் மெய்போலவே தோன்றும்.

மெய்யும் பொய்யாகும்

51. மெய்யுடை ஒருவன் சொலமாட் டாமையால்
பொய்போ லும்மே பொய்-போ லும்மே. 64

உண்மை பேசும் இயல்புடையவனாயினும் சொல்லும் ஆற்றலற்றவன் சொல்வது பொய் போலத் தோன்றுவதுமுண்டு.

வழித்துணை

52. துணையோடல்லது நெடுவழி போகேல். 67

துணைவரோடு அன்றி நீண்ட தூரம் செல்லாதே.

# விவேக சிந்தாமணி

அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றிற் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம் போம் - நல்ல
குணமதிக மாம் அருணைக் கோபுரத்துள் வீற்றிருக்கும்
கணபதியைக் கைதொழுதக் கால். 1

விநாயகக் கடவுளை (அறிவுப் பொருள்) பக்தியோடு வணங்கினால் சகல துன்பங்களும் நீங்கும். முன் செய்த வினைகளும் ஆணவமும் ஒழியும் இப்பிறப்பில் தேடுதற்குரிய நற்குணம் அதிகமாகும்.

தந்தையுரை தட்டினவன் தாயுரை இகழ்ந்தோன்
அந்தமுறு தேசிகர்தம் ஆணையை மறந்தோன்
சந்தமுறு வேதநெறி மாறினவர் நால்வர்
செந்தழலின் வாயினிடை சேர்வது மெய் கண்டீர். 2

தகப்பன் சொல்லை தள்ளி நடந்தவன், தாய் வார்த்தையை இகழ்ச்சி செய்தவன், அறிவான குருவின் ஆணையை மறந்தவன், சாந்தியைத் தரும் வேத நெறிகளை (அறநெறிகளை) மீறியவன் ஆகிய இந் நால்வரும் வினைப்பயன் காரணமாக வீழ்ச்சி அடைதல் உண்மை என்று அறியக்கடவீராக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆபத்துக் குதவாப்பிள்ளை அரும்பசிக் குதவா அன்னம்
தாகத்தை தீராத் தண்ணீர் தரித்திரம் அறியாப் பெண்டீர்
கோபத்தை அடைக்காவேந்தன் குருமொழி கொள்ளாச் சீடன்
பாபத்தைத் தீராத் தீர்த்தம் பயனில்லை ஏழும்தானே. 3

ஆபத்து நேரத்தில் (தேவையான நேரத்தில்) உதவாத பிள்ளையும், பசிக்கு உதவாத சாதமும், தாகவெப்பத்தை தீர்க்காத தண்ணீரும், வறுமையறியாமல் (அதிக செலவு செய்யும்) செலவழிக்கும் மனைவியும் கோபத்தை அடக்காத அரசனும், ஆசிரியன் உபதேசித்த அற மொழிகளை வாழ்க்கையில் கடைப்பிடிக்காத மாணாக்கனும் பாவங்களை (வினைப்பயன்) த் தீர்க்காத தீர்த்தமும் ஆகிய இந்த ஏழினாலும் எவ்வித பயனுமில்லை.

நாரிகள் வழக்க தாயின் நடுவறிந் துரைப்பார் சுத்தர்
ஏரிபோல் பெருகி மண்மேல் இருகணும் விளங்கி வாழ்வார்
ஓரமே சொல்வா ராகில் ஓங்கிய கிளையும் மாண்டு
தீரவே கண்கள் இரண்டும் தெரியாது போவர் தாமே. 4

ஏழைப்பெண்கள் முறையிட்ட வழக்குகளாயிருப்பினும் நியாயப் பொருள் நிலைமையறிந்து நடுவுநிலை தவறாது நீதியைக் கூறுபவர் பரிசுத்த மனமுடையவர்கள், ஏரிநீர் பெருகுவது போல் பூமியில் இரு கண்களும் (அறிவு, ஞான) பிரகாசித்து வாழ்வார்கள். ஒரு பக்கம் சார்ந்து பட்ச பாதகமாய் நீதியைக் கூறுவாராகில் சுற்றம் அழிந்து இருவிழிகளும் தெரியாத குருடராய் வருந்துவார்கள்.

தாய்பகை பிறர்நட்பாகில் தந்தை கடன்காரனாகில்
மாய்பகை மனைவி யாரும் மாவழ குற்ற போது
பேய்பகை பிள்ளை தானும் பெருமைநூல் கல்லாவிட்டால்
சேய்பகை ஒருவர்க் காகும் என்றனர் தெளிந்த நூலோர். 5

பிறருக்கு அனுகூலமாகவும் தனக்குப் பகையாகவும் இருக்கின்ற மாதாவும், அதிகம் கடனாளியாயுள்ள பிதாவும், மாயமானபகை (வெளியில் தெரியாத பகை) கொள்ளும் மனைவியும்' அறநெறிகளைக் கற்றுணராத பிள்ளையும் ஒருவனுக்கு கிடைக்குமாகில் அவன் யாவருக்கும் பகையுடையவன் (உதவாதவன்) என்றே அறநெறியாளர் கூறுவார்கள்.

இடுக்கினால் வறுமையாகி ஏற்றவர்க் கிசைந்த செல்வம்
கொடுப்பதே மிகவும் நன்று குற்றமேயின்றி வாழ்வார்
தடுத்ததை விலக்கி னோர்க்குத் தக்கநோய் பிணிகளாகி
உடுக்கவே யுடையு மின்றி உண்சோறும் இல்லையாமே. 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பம் அடைந்து வறுமையால் யாசிப்பவர்களுக்கு இயன்றளவு உதவி செய்தலே மிகவும் நல்லது. அவர்கள் யாதொரு குறையும் இல்லாமல் (உண்மையாய்) வாழ்வர் கொடுக்கின்றவர்களை தடுத்து விலக்குகின்றவர்களுக்கு துன்பம், பிணிகள் உண்டாகி உடுக்கத் துணியுமின்றி உண்பதற்கு அன்னமும் கிடையாது கஷ்டப்படுவார்கள்.

மெய்யதைச் சொல்வாராகில் விளங்கிடும் மேலுநன்மை
வையகம் அதனைக் கொள்வார் மனிதரில் தேவராவர்
பொய்யதைச் சொல்வாராகில் போசனம் அற்பமாகும்
நொய்யரி சியர்க ளென்று நோக்கிடார் அறிவுள்ளோரே 7

உண்மை (உண்மைப் பொருள்) சொல்வோரிடத்திலும் நன்மை பொலிந்து விளங்கும். உலகத்தவர் அவரது வார்த்தைகளை ஒப்புக் கொள்வார்கள். மானிடரில் அவரே தெய்வமாவர். பொய் (ஒன்றும் இல்லாமை) சொல்பவருக்கு உணவும் கிடையாது போகலாம். அறநெறியாளர்கள் இவர்களை மதிக்கமாட்டார்கள்.

ஏரிநீ ரிருந்த போதங் கிருந்தன பட்சி யெல்லாம்
மாரிநீர் மறுத்த போது பறவையங்கு இருப்பதுண்டோ
பாரினை யாளும் வேந்தன் பட்சமும் மறந்த போதே
யாருமே நிலையில் லாமல் அவரவர் ஏகுவாரே. 8

ஏரியில் நீர் நிறைந்திருக்கும் காலம் பட்சிகள் வந்து கூடும். அந்நீர் வற்றியபோது பட்சிகள் வேறு இடம் நோக்கிச் சென்று விடும். நாட்டை ஆளும் அரசன் (அறநெறி) அன்பை மறந்தபோது அங்குள்ள மக்கள் வேறு அரவணைக்கும் நாட்டைத் தேடிச் செல்வார்கள்.

சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுடனே அரவப்
பாய்கொண்டா லும்பணியும் பட்டீர் சுரத்தானே
நோய்கொண்டாலும் கொளலாம் நூறு வயதளவும்
பேய்கொண்டா லும்கொளலாம் பெண் கொள்ளலாகாதே. 9

சிவந்த நிறமுள்ள தாமரை மலரில் வீற்றிருக்கும் பிரமதேவனும் ஆதி சேசனான பாம்பை பாயாகக் கொண்ட மகாவிஷ்ணுவும் வணங்கித் துதிக்கும் சிவபெருமானே, (உண்மைப் பொருள்) ஒருவன் நூறு வயதளவும் நோயைக் கொண்டிருக்கலாம். பேயையும் (அறிவின்மை) கொண்டிருக்கலாம். ஆனால் நற்குணமில்லாத மனைவியரைக் கொள்ளலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைத்தான் புகழ்வோருந் தன்குலமே
பெரிதெனவே தான் சொல் வோரும்
பொன்னைத் தான் தேடியறம் புரியாமல்
அவைகாத்துப் பொன்றி னோரும்
மின்னைப் போல் மனையாளை வீட்டில் வைத்து
வேசைசுகம் விரும்புவோரும்
அன்னைபிதா பாவலரைப் பகைப்போரும்
அறிவில்லாக் கசடராமே. 10

தன்னையே புகழ்கின்றவர்களும் தன் சாதியே பெரிதென என்று உரைப்பவரும் பொருளைத்தேடி தருமம் செய்யாமல் காத்து வைத்திருப்பவர்களும் மனைவி வீட்டிலிருக்க (தேககாந்தியுடைய) வேறு பெண்களை இச்சிக்கின்றவர்களும் தாய், பிதா, குரு முதலியோரை பகைத்துக் கொள்பவர்களும் ஆகிய இவர்கள் அறிவில்லாத கீழ்மக்கள் ஆவார்கள்.

அருமையும் பெருமை தானும் அறிந் துடன்படுவர் தம்மால்
இருமையும் ஒருமையாகி இன்புறற் கேதுவுண்டாம்
பரிவிலாச் சகுனி போலப் பண்பு கெட்டவர்கள் தம்பால்
ஒருமையின் நிரயம் எய்தும் ஏதுவேயுயரும் மன்னோ. 11

ஒருவனுடைய (அறநெறி) அருமை பெருமைகளை அறிந்து உடன்பாடான நட்பு கொள்வாராகில் இம்மை மறுமை இரண்டிலும் இன்பத்தை அடைவதற்கு பயன் உண்டாகும். துர்க்குணம் கொண்டவர்களின் (அரக்கத் தன்மை) நட்பினால் பாவங்கள் அதிகப்பட்டு நரக வேதனை அனுபவிக்க நேரிடும்.

சாந்தி விரும்பினாயானால் பல சங்கற்பங்கள் செய்யாதே என்றார் ஒரு முனிவர். செய்ய வேண்டியதை நன்னெறியில் செய்வதே சாந்தியைத் தரும். நமது பேச்சுக்களிலும் செயல்களிலும் பத்தில் ஒன்பது பங்கு யாருக்கும் வேண்டாதவை. அவற்றை நீக்கினால் கவலையும் மனக் கசப்பும் நீங்கும். காலம் வீணாகாது. செயல் சிக்கனத்தோடு எண்ணங்களையும் சிக்கனப்படுத்து, உன் பேச்சுக்களில் தைரியமும் சத்தியமும் பொருந்தியிருக்க வேண்டும். ஒவ்வொருவன் உள்ளத்திலும் தருமத்தைப் பற்றிநிற்கும் தெய்வம் ஒன்றுண்டு. அதை நம்பி செயல்படுபவருக்கு வனமும் வேண்டாம். சுற்றமும் வேண்டாம், புகழும் வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

# ஸ்ரீ தாயுமானவர் சுவாமி பாடல்கள்

1. அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்த பூர்த்தி ஆகி,
அருளொடு நிறைந்தது எது? தன் அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும் படிக்கு இச்சை வைத்து, உயிர்க்கு உயிராய்த்
தழைத்தது எது? மனவாக்கினில்
தட்டாமல் நின்றது எது? சமயகோடிகள் எலாம்
தம்தெய்வம் எம்தெய்வம் என்று
எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கிடவும் நின்றது எது?
எங்கணும் பெரு வழக்காய்,
யாதினும் வல்ல ஒரு சித்து ஆகி, இன்பமாய்
என்றைக்கும் உள்ளது எது? மேல்
கங்குல் பகல் அறநின்ற எல்லை உளது எது? அது
கருத்திற்கு இசைந்தது அதுவே;
கண்டன எலாம்மோன உருவெளியது ஆகவும்
கருதி — அஞ் சலிசெய்குவாம்.

2. ஆழாழி கரைஇன்றி நிற்க இலையோ? கொடிய
ஆலம் அமுது ஆக இலையோ?
அக்கடலின் மீதுவட அனல்நிற்க இல்லையோ?
அந்தரத்து அகிலகோடி
தாழாமல் நிலை நிற்க இல்லையோ? மேருவும்
தனுவாக வளைய இலையோ
சப்த மேகங்களும் வஜ்ரதரன் ஆணையில்
சஞ்சரித்திட இல்லையோ?
வாழாது வாழவே இராமன் அடியால் சிலையும்
மடமங்கை ஆக இலையோ?
மணிமந்தரம் ஆதியால் வேண்டு சித்திகள் உலக
மார்க்கத்தில் வைக்க இலையோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாழான என்மனம் குவிய ஒரு தந்திரம்
 பண்ணுவது உனக்கு அருமையோ?
பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம் அற நிறைகின்ற
 பரிபூர ணானந்தமே!

3. ஆசைக்குஓர் அளவு இல்லை அகிலம்எல் லாம்கட்டி
 ஆளினும் கடல் மீதிலே
ஆணைசெல வேநினைவர், அளகேசன் நிகராக
 அம்பொன்மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர்,
 நெடுநாள் இருந்த பேரும்
நிலையாக வே — இனும் காயகற்பம் தேடி
 நெஞ்சு புண் ஆவர் எல்லாம்
யோசிக்கும் வேளையில் பசிதீர உண்பதும்
 உறங்குவதும் ஆக முடியும்;
உள்ளதே போதும்நான் நான்எனக் குளறியே
 ஒன்றை விட்டு ஒன்று பற்றிப்
பாசக் கடற்குளே வீழாமல் மனது அற்ற
 பரிசுத்த நிலையை அருள்வாய்,
பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கம்அற நிறைநின்ற
 பரிபூர ணானந்தமே!

4. காரிட்ட ஆணவக் கருஅறையில் அறிவுஅற்ற
 கண்இலாக் குழவி யைப்போல்
கட்டுண்டு இருந்தஎமை வெளியில்விட்டு, அல்லலாம்
 காப்பு இட்டு, அதற்குஇசைந்த
பேரிட்டு, மெய்என்று பேசுபாழ்ம் பொய்உடல்
 பெலக்க வினை அமுதம் ஊட்டிப்
பெரியபுவ னத்தினிடை போக்குவரவு உறுகின்ற
 பெரியவிளை யாட்டு அமைத்திட்டு
ஏரிட்ட தன்சுருதி மொழி தப்பில் நமனைவிட்டு
 இடர்உற உறுக்கி இடர்தீர்த்து,
இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
 இசைந்துதுயில் கொள்மின் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரிட்ட உலகுஅன்னை வடிவான எந்தையே!
சித்தாந்த முக்திமுதலே!
சிரிகிரி விளங்கவரு தக்ஷணா மூர்த்தியே
சின்மயா னந்தகுருவே!

5. எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிது அரிதுகாண்
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?
ஏதுவருமோ? அறிகிலேன்,
கண் அகல் நிலத்துநான் உள்ளபொழுதே அருள்
ககனவட் டத்தில் நின்று
கால்ஊன்றி நின்றுபொழி ஆனந்த முகிலொடு
கலந்து மதி அவசம் உறவே
பண்ணுவது நன்மை; இந்நிலை பதியு மட்டுமே
பதியாய் இருந்த தேகப்
பவுரி குலை யாமலே கௌரி குண் டலி ஆயி
பண்ணவி தன் அருளினாலே
விண் நிலவும் மதி அமுதம் ஒழியாது பொழியவே
வேண்டுவேன் உமது அடிமைநான்,
வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே!

6. கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்,
கற்றும் அறிவு இல்லாத என்
கர்மத்தை என்சொல்கேன்? மதியை என்சொல்கேன்?
கைவல்ய ஞான நீதி
நல்லோர் உரைக்கிலோ, கர்மம்முக் கியம் என்று
நாட்டுவேன் கர்மம் ஒருவன்
நாட்டினா லோபழைய ஞானம்முக் கியம் என்று
நவிலுவேன் வடமொழியிலே
வல்லான் ஒருத்தன்வர வும்த்ரா விடத்திலே
வந்ததா விவகரிப்பேன்;
வல்லதமிழ் அறிஞர்வரின், அங்ஙனே வடமொழியின்
வசனங்கள் சிறிது புகல்வேன்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகை வந்த
வித்தை என் முக்தி தருமோ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலை பெற்ற
வித்தகச் சித்தர் கணமே!

7. எத்தனை விதங்கள் தான் கற்கினும் கேட்கினும் என்
இதயமும் ஒடுங்கவில்லை,
யான்எனும் அகந்தைதான் எள் அளவும் மாற இலை,
யாதினும் அபிமானம் என்
சித்தமிசை குடிகொண்டது ஈகையோடு இரக்கம் என்
ஜென்மத்தும் நான் அறிகிலேன்
சீலமொடு தவவிரதம் ஒருகனவில் ஆயினும்
தரிசனம் கண்டும் அறியேன்;
பொய்த்தமொழி அல்லால் மருந்துக்கும் மெய்ம்மொழி
புகன்றிடேன்; பிறர் கேட்கவே
போதிப்பது அல்லாது சும்மா இருந்து அருள்
பொருந்திடாப் பேதைநானே;
அத்தனை குணக்கேடர் கண்டதாய்க் கேட்டதா
அவனிமிசை உண்டோ சொலாய்
அண்டபகி ரண்டமும் அடங்க ஒரு நிறைவு ஆகி
ஆனந்தம் ஆனபரமே!

8. கல்லேனும் ஐயஒரு காலத்தில் உருகும் என்
கல்நெஞ்சம் உருக இலையே,
கருணைக்கு இணங்காத வன்மையையும் நான்முகன்
கற்பிக்க ஒருகடவுளோ?
வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும்பெரு
வழக்குக்கு இழுக்கும் உண்டோ?
வானமாய் நின்று இன்ப மழையாய் இறங்கி எனை
வாழ்விப்பது உன்பரம் காண்;
பொல்லாத சேய்எனில் தாய்தள்ளல் நீதமோ?
புகலிடம் பிறிதும் உண்டோ?
பொய்வார்த்தை சொல்லிலோ திருஅருட்கு அயலுமாய்ப்
புன்மையேன் ஆவன், அந்தோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லால் முழக்கிலோ சுகம் இல்லை, மௌனியாய்ச்
சும்மா இருக்க அருளாய்;
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரம்
ஜோதியே சுகவாரியே!

9. காகம்ஆ னதுகோடி கூடிநின் றாலும்ஒரு
கல்லின் முன் எதிர்நீற்குமோ?
கர்மம்ஆ னதுகோடி முன்னேசெய் தாலும்நின்
கருணைப்ர வாக அருளைத்
தாகமாய் நாடினரை வாதிக்க வல்லதோ
தமிய னேற்கு அருள்தாகமோ
சற்றும் இலை என்பதுவும் வெளியாச்சு; வீணையெலாம்
சங்கேத மாய்க்கூடியே.
தேகம்ஆ னதைமிகவும் வாட்டுதே; துன்பங்கள்
சேராமல் யோக மார்க்க
சித்தியோ வரவில்லை; சஹஜநிஷ் டைக்கும் என்
சிந்தைக்கும் வெகுதூரம் நான்
ஏகமாய் நின்னொடு இருக்கும்நாள் எந்தநாள்
இந்நாளில் முற்று உறாதோ?
இகபரம இரண்டினிலும் உயிரினுக்கு உயிர்ஆகி
எங்கும் நிறைகின்ற பொருளே!

10. இனிஏது எமக்குஉன் அருள் வருமோ எனக்கருதி
ஏங்குதே நெஞ்சம் ஐயோ;
இன்றைக்கு இருந்தாரை நாளைக்கு இருப்பார் என்று
எண்ணவோ திடம் இல்லையே;
அநியாய மாய்இந்த உடலைநான் என்றுவரும்
அந்தகற்கு ஆளாகவோ?
ஆடித்திரிந்து நான் கற்றதும் கேட்டதும்
அவலமாய்ப் போதல் நன்றோ?
கனியேனும் வறியசெங் காயேனும் உதிர்சருகு
கந்தமூ லங்களேனும்
கனல்வாதை வந்துஎய்தின் அள்ளிப் புசிந்துநான்
கண்மூடி மௌனி ஆகித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியே இருப்பதற்கு எண்ணினேன் எண்ணம் இது
சாமிநீ அறியாததோ
சர்வபரி பூரண அகண்டதத் துவம் ஆன
சச்சிதா னந்தசிவமே!

11. தந்தைதாய் தமர் தாரம் மகவுஎனும் இவை எலாம்
சந்தையில் கூட்டம், இதிலோ
சந்தேகம் இல்லை, மணி மாடம்மா ளிகைமேடை
சதுரங்க சேனையுடனே
வந்தது ஓர் வாழ்வும்ஓர் இந்திரஜா லக்கோலம்
வஞ்சனை பொறாமை லோபம்
வைத்தமன மாம்கிருமி சேர்ந்தமல பாண்டமோ
வாஞ்சனை இலாதகனவே
எந்தநா ளும்சரி எனத் தேர்ந்து தேர்ந்துமே
இரவுபகல் இல்லா இடத்து
ஏகமாய் நின்றநின் அருள் வெள்ளம் மீதிலே
யான் என்பது அறவும் மூழ்கிச்
சிந்தை தான் தெளியாது சுழலும்வகை என்கொலோ
தேடரிய சத்து ஆகிஎன்
சித்தமிசை குடிகொண்ட அறிவு ஆன தெய்வமே
தேஜோ மயானந்தமே!

12. கந்துஉக மதக்கரியை வசமா நடத்தலாம்,
கரடிவெம் புலி வாயையும்
கட்டலாம், ஒருசிங்கம் முதுகின்மேல் கொள்ளலாம்
கண்செவி எடுத்து ஆட்டலாம்
வெந்தழலின் இரதம் வைத்து ஐந்துலோ கத்தையும்
வேதித்து விற்று உண்ணலாம்
வேறு ஒருவர் காணாமல் உலகத்து உலாவலாம்
விண்ணவரை ஏவல் கொளலாம்;
சந்ததமும் இளமையொடு இருக்கலாம்; மற்றுஒரு
சரீரத்திலும் புகுதலாம்
ஜலம்மேல் நடக்கலாம்; கனல்மேல் இருக்கலாம்:
தன்நிகர் இல் சித்தி பெறலாம்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தையை அடக்கியே சும்மா இருக்கின்ற
திறம் அரிது சந்துஆகி என்
சித்தமிசை குடிகொண்ட அறிவான தெய்வமே
தேஜோ மயானந்தமே!

★ ★ ★

வேண்டுகோள்:-

விநாயகர் தருமநிதியத்தின் 'தமிழ் எழுத்து ஏடு' வெளிவந்துள்ளது. வடமராட்சிப் பகுதியிலுள்ள அனைத்து பாலர் பாடசாலைகளும் தங்கள் தேவைக்கு ஏற்ப பாலர்களுக்கான ஏடுகளை எம்மிடம் இலவசமாகப் பெற்று சிறுவர்களுக்கு விநியோகித்து பயனடையுமாறு அன்புடனும் பண்புடனும் பணிவுடனும் வேண்டிக் கொள்கிறோம்,

01 - 10 - 94 — நிறுவனர்

★ ★ ★

# அறநெறிச் சிந்தனையைக் கிரகிக்க வேண்டிய பருவம்

எந்த ஒரு உயிர் இனத்துக்கும் ஆரம்பத்தில் நாம் கொடுக்கும் சக்தியோ, பசளையோ அத்தன்மைக்கு ஏற்ப செம்மையாகவும் செழிப்பாகவும் வளர உதவுகின்றது. தாவரத்திற்கு அடிக்கட்டுப் பசளையே அதன் வளர்ச்சியை உயர்த்துகின்றது. நாம் பசளையைப் போடாது விட்டால் மரம் உரிய பலனைத் தரமுடியாது. இவ்வாறே எமது வீட்டு மிருகங்களும் மற்றைய விலங்கினங்களும் தமது குட்டிகளுக்கு நல்ல சத்தான ஊட்ட உணவை ஊட்டி வளர்த்தாலே சிறப்பாக வளரமுடியும். இவ்வாறே மனித இனமும் சிறுபராயத்திலேயே கூடிய கவனம் எடுத்து அதற்குரிய பயன் அளிக்கக்கூடிய உணவு வகைகளை வளங்கி வருகின்றன. இந்த முறைகள் எல்லாம் அந்த இனத்தின் உடல் வளர்ச்சிக்குத்தான் உதவுகின்றன.

பகுத்தறிவுள்ள மனித இனத்தின் பகுத்தறிவை வளர்ப்பதற்காகவே அறநெறிச் சிந்தனையை வளர்க்க வேண்டியுள்ளது. அறநெறிச் சிந்தனை வளர்வதற்கு நல்எழுத்து முக்கியம். இந்த அறநெறிச் சிந்தனையை இளம்பராயத்திலேயே சிறுவர்கள் மனதில் பதிப்பித்தாலே பயன்பெறுவனவாய் அமையும். காலம் தாழ்த்தி சிந்தனையை விதைப் போமேயானால் பயன் தருவது மிகக்குறைவு. ஏனெனில் காலம் செல்லச் செல்ல அவர்களுக்கு வேலை கூடுகின்றது. வேலை கூடுவதினால் அவர்கள் மனது கவர்ச்சியில் ஈடுபட்டு அறநெறியைக் கிரகிக்கும் சக்தியை இழக்கின்றது. இதை நீங்கள் சரியென உணரும் பட்சத்தில் மாணவ சமுதாயத்திற்கு சிந்தனையில் ஊட்டி எதிர்காலச் சமுதாயம் அறநெறிச் சமுதாயமாக வளர தங்களை அர்ப்பணித்து ஆவன செய்யுமாறு அன்புடனும், பண்புடனும், பணிவுடனும் இருகரம் கூப்பி வேண்டிக் கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது வெளியீடுகளை
பின்வரும் விலாசங்களில்
பெற்றுக் கொள்ளலாம.

★ பாஷையூர் புனித அந்தோனியா
மக்கள் முன்னேற்ற ச. ச. நி.

★ சி. சி. வரதராசா
- கொழும்புத்துறை.

★ சிவ. ஆறுமுகசாமி
- கோணாவளை கிழக்கு,
கொக்குவில்.

★ வழி கலை இலக்கிய வட்டம்
- சுன்னாகம்.

★ அஷ்டலட்சுமி கலண்டர் நிறுவ.
- கண்டி றோட், கைதடி.

★ அன்னை மருந்தகம்
- பருத்தித்துறை.

★ S. K. சாமி — நெல்லியடி.

★ கலைச்சோலை
- வல்வெட்டித்துறை.

★ அபிராமி மருந்தகம் - நீர்வேலி

★ சின்னையா ஸ்ரோர்ஸ்
- கொடிகாமம்.

★ சிவம் மருந்தகம்
- சாவகச்சேரி.

★ சூரியா பார்மசி - புத்தூர்.

★ ரி. வி. பாலா புத்தகசாலை
- இணுவில்.

இவ் வெளியீடு புலோலி மேற்கு
விநாயகர் தரும நிதியத்திற்காக
விநாயகர் தரும நிதிய அச்சகத்தில்
94—109 பதிப்பிக்கப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org